**சம்மாந்துறை பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சம்மாந்துறை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்மாந்துறை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டட நிர்மானம் மற்றும் கொள்வனவு தொடர்பில் ரூபா 19,786,215 உள்ளூராட்சி திணைக்களத்திடமிருந்து பெறவேண்டியதாகவும், குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தவேண்டியதாகவும் நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இவ்வருட ஏப்ரல் மாதத்தின் ஆரம்ப பகுதியில் உள்ளூராட்சி திணைக்களத்திலிருந்து உரிய தொகை பெறப்பட்டு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விடயம் இவ்வருட நிதிக்கூற்றுக்களில் சீர் செய்யப்படும். | வேலைகள் மீளாய்வாண்டில் முடிவுறுத்தப்பட்டிருந்தமையினால் பெறவேண்டியதாகவும்,மற்றும் செலுத்த வேண்டியதாகவும் நிதிக்கூற்றுகளில் காட்டப்படல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்படும் 65 காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் 03 மோட்டார் சைக்கிள், 17 வாகனங்கள் மற்றும் 09 பெட்டிகளின் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப்பெறுமதி நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இவை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | விரைவாக மீள்மதிப்பீடு செய்து உண்மைப் பெறுமதிகளை நிதிக்கூற்றில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் செப்தெம்பர் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பனம் ரூபா 2,857,828 காணப்பட்டிருந்தும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,680,559 வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய தொகையினுள் செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதத்திற்கான தொகையும் 2025 ஜனவரி மாதத்தில் வங்கியில் நேரடியாக கிடைக்கப்பெற்றமை தவறுதலாக நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றில் சீராக்கம் செய்யப்படும். | மீளாய்வாண்டில் பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பனம் முழுமையாக நிதிக்கூற்றக்களில் காட்டப்படல் வேண்டும். |
| (ஈ) | முத்திரைக் கட்டண வருமானம் 2023 நவம்பர் தொடக்கம் 2024 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய நிலுவைகள் என்பன கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2024 ஜனவரி – மே மாதம் வரையான கட்டணத்தினை சரிபார்ப்பதற்காக ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஜுன்-டிசம்பர் வரை விபரங்கள் காணித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சபைகள் நிதி, நிருவாக விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டிற்கும் முத்திரைக் கட்டண வருமானம் கணிப்பிட்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். |
| (உ) | பொதுச் சந்தைக் குத்தகை வருமானம் ரூபா 190,027 குறைத்து நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | மல்வத்தை பொதுச்சந்தை குத்தகைக்கு வழங்கப்படாமையினால் சபை ஊழியரினால் ரூபா 190,027 வருமானமாக அறவிடப்பட்ட தொகையே நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளதுஎதிர்வ ரும் ஆண்டில் திரண்ட நிதி ஊடாக சீராக்கம் செய்யப்படும். | உண்மையாக உழைக்கப்பட்ட அனைத்து வருமானங்கள் நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும. |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையினால் பேணப்பட்டு வரும் பதிவேடுகளின் தொகைகளுக்கும் நிதிக்கூற்றில் காட்டப்பட்டு வரும் தொகைகளுக்குமிடையே ரூபா 1,548,099 வேறுபாடுகள் காணப்பட்டிருந்தும், அவ் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து இணக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறைச்சிக்கடை குத்தகை வருமான பதிவேட்டு மீதிகளை நிதிக்கூற்றினது மீதிகளுடன் இணக்கம் செய்வதற்கும், முற்பணமாக வழங்கப்பட்டுள்ள ரூபா. 548,086.00 தொகையினை பதிவழிப்புச்செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பதிவேடு மற்றும் நிதிக்கூற்றுக்களின் மீதிக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை இனங்கண்டு இணக்கம் செய்வதற்கு மிக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.3 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2024 யூன் 26 ஆந் திகதியில் சபையினால் ஓய்வூதிய பங்களிப்பாக ரூபா 1,500,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அத் தொகைக்கான ஊழியர்களின் விபரம், ஓய்வூதிய நிலுவை மற்றும் செலுத்த வேண்டிய காலம் என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சபையில் காணப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய திணைக்களத்தின் கடிதம் சார்பில் உள்ளூராட்சி திணைக்களத்திடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க 1993.09.03 ம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி சேவையில் ஓய்வு பெற்ற ஊழியர்களின் விபரங்கள் சம்மாந்துறை, இறக்காமம் மற்றும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் என்பவற்றில் கோரப்பட்டிருந்தும், ஊழியர்களின் விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை. | கொடுப்பனவு செய்ய முன் அதற்கான ஆவணங்களை உறுதிப்படுத்திய பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | |
| (i) 136 பிரிவு | சபையின் அதிகாரப் பிரிவிலுள்ள அரசிற்கு சொந்தமான 15 நிறுவனங்களின் கட்டிடங்கள் மற்றும் காணிகளினை ரூபா 669,615 மதிப்பீட்டிற்கு உட்படுத்தியிருந்த போதிலும், அவ் நிறுவனங்களிடமிருந்து வீதவரி அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட அரச நிறுவனங்களுக்கு ஒவ்வொரு வருடங்களும் கடிதங்கள் மற்றும் k Form என்பன அனுப்பப்படுவதுடன் சில நிறுவனங்கள் தவறாது ஆதனவரி செலுத்துகின்றனர். எனினும் சில நிறுவனங்கள் இதனை பொறுப்படுத்தாதும் உள்ளனர். | பிரதேச சபை சட்டத்திற்கேற்ப பொருத்தமான அரச நிறுவனங்களுக்கு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | | | |
| (i) இலக்கம் 81 விதி | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகளை மீளளிப்புச் செய்யக் கோரும் விண்ணப்பங்கள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட விடயம் தொடர்பாக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் காலாண்டுக்கு ஒருமுறை கடிதங்கள் அனுப்ப நடிவடிக்கை மேற்கொள்ளப்படும். | பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) இலக்கம் 193 விதி | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி நெறி 2006 பிரிவு 5.4.12 | பெறுமதி சேர் வரி கொடுப்பனவு செய்த பின்னர் அது பற்றிய விபரங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டியிருந்தும், மீளாய்வாண்டில் 04 ஒப்பந்ததார்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 9,112,103 தொடரபில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை | இனிவரும் காலங்களில் காணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தினை மிகைத்த செலவுகள் ரூபா 14,623,497 ஆக இருந்ததுடன்,

அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,472,491 தொகையாக ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,828,281 | 37,670,629 | 10,030,618 | 27,640,010 | 8,050,000 | 33,030,053 | 8,963,938 | 24,066,115 |
| (ii) | வாடகை | 45,445,189 | 39,420,517 | 37,572,722 | 1,847,795 | 44,936,120 | 40,938,912 | 38,787,204 | 2,151,708 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 2,600,000 | 1,964,700 | 1,964,700 | - | 3,080,000 | 2,156,700 | 2,136,300 | 20,400 |
| (iv) | ஏனைய வருமானம் | 13,560,720 | 8,069,198 | 8,069,198 | - | 11,684,000 | 5,762,913 | 5,762,913 | - |
| | கூட்டுத் தொகை | 72,434,190 | 87,125,044 | 57,637,238 | 29,487,805 | 67,750,120 | 81,888,578 | 55,650,355 | 26,238,223 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக ஆதனவரி வருமானமாக ரூபா 9,578,281 பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றில் ரூபா 1,094,198 மாத்திரமே அறவீடு செய்யப்பட்டிருந்தது. இது பாதீட்டில் 11 சதவீதமாக காணப்பட்டிருந்தது. | வீத வரி அறவீட்டின் போது முந்திய ஆண்டின் நிலுவைகளும் சேர்ந்தே அறவீடு செய்யப்படுகின்றது இவற்றை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | பாதிடப்பட்ட அனைத்து வருமானங்களை வினைத்தறனாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டு வரையான வீதவரி நிலுவை ரூபா 24,066,115 காணப்பட்டிருந்தும், அவற்றில் ரூபா 8,819,457 மாத்திரமே மீளாய்வாண்டில் அறவீடு செய்யப்பட்டிருந்தது. இது நிலுவையில் 37 சதவீதமாக காணப்பட்டிருந்தது. | RI உத்தியோகத்தர் பற்றாக்குறையே சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. தற்போது ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தனித்தனி உத்தியோகத்தர்களை விஷேடமாக நியமித்து அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. | நிலுவைகளை அறவிடுவதற்கு மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த ஆண்டுகள் வரையான கடையறை வாடகை நிலுவை ரூபா 288,978 யினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிலுவைகளை அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்புவதன் மூலமும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு அறவீடு செய்யப்படுவதுடன், அவ்வாறு அறவீடு செய்ய முடியாமல் உள்ள நிலுவை தொடர்பில் நீதி மன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | இறைச்சிக்கடை வாடகை தொடர்பான பதிவேட்டின் பிரகாரம் கடந்த ஆண்டுகளில் உள்ள மீதி ரூபா 586,870 யினை 5 நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறைச்சிக் கடை குத்தகை நிலுவையை அறவீடு செய்வதற்கு 12 நிலுவையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு சட்டத்தரணிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (உ) | சம்மாந்துறை பொதுச் சந்தை குத்தகை நிலுவை ரூபா 819,660 காணப்பட்டிருந்ததுடன், அத் தொகையினை குத்தகைக்கு பெற்றவரிடமிருந்து 03 வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022ம் ஆண்டில் பொதுச் சந்தை திறந்த வெளியை குத்தகை பெற்று ரூபா 819,660.00 நிலுவையினை செலுத்தாது வெளிநாடு சென்றுள்ளதனால் தற்போது அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டில் 1,178 கடைகளுக்கான வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 2,052,900 அறவிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 50 கடைகளுக்கு வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நபர்களினால் சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் வியாபார அனுமதிப் பத்திர சான்றிதழ் குறித்த சிலருக்கு வழங்கப்படவில்லை | மீளாய்வாண்டினுள் வியாபார அனுமதிப் பத்திரங்களை உரிய விதிகளின் பிரகாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (எ) | சபையினால் 2023 நவம்பர் தொடக்கம் 2024 திசெம்பர் வரையான 14 மாதங்களுக்குரிய முத்திரைக் கட்டணங்கள் உரிய காலப்பகுதிகளில் கணிப்பீடு செய்யப்பட்டு கோரிப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்குரிய முத்திரைத் தீர்வைக் பெறுவதற்கு கோரியுள்ளதுடன், 2024 ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையான முத்திரைத் கட்டணம் சரிபார்ப்பதற்காக காணித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது | உரிய காலப் பகுதியில் விபரங்கள் திரட்டப்பட்டு மிக விரைவாக அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வெண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையினால் 2020 யூன் 17 ஆந் திகதி தொடக்கம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,893,574 யினை கணக்காய்வுத் திகதி வரைக்கும் தீர்வு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள 1,217,500.00 ரூபாயில், 2003 ஆம் ஆண்டிலிருந்து முற்பணமாக வழங்கப்பட்டுள்ள ரூபா 548,086.73 தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் ரூபா 548,086.73 தொகையினை பதிவளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. | முற்பளமாக வழங்கப்பட்ட தொகைகளினை உரியவர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 27,640,010 நிலுவை காணப்பட்டிருந்தும், அவ் நிலுவைகளை கால ரீதியாக வகைப்படுத்தி அறவீடு செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன உரிமையாளர்களின் நிலுவை பற்றி ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு, நடமாடும் சேவை மூலமாகவும் அறவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | ஆதன நிலுவைகள் கால அடிப்படையில் வகைப்படுத்தி உரிய வகையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வாடகை மற்றும் குத்தகை | | |
| | சபையின் 84 கடையறைகள் மற்றும் சம்மாந்துறை பொதுச் சந்தை ஆகியவை விலைமனு கோரப்படாமல் காலகாலமாக குறித்த நபர்களே வாடகைக்கு பெற்றிருந்தனர். இதனால் குறித்த கடையறைகளை பகிரங்கமாக விலைமனு கோரி வழங்கி வருமானத்தினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடையறைகளுக்கு நிலம் வழங்கிய 14 பேர் உள்ளனர் அவர்களுக்கு தொடர்ந்தும் கடை வழங்குவதுடன் ஏனைய கடையறைகளில் வெற்றிடமாக உள்ள கடைகளை 2024.03.11, 2024.10.25, 2025.02.18 ஆம் திகதிகளில் கேள்வி கோரப்பட்டுள்ளது | கடையறைகள் மற்றும் சம்மாந்துறை பொதுச் சந்தை ஆகியவற்றை அனைவரும் பெற்றுக்கொள்ள கூடிய வகையில் பகிரங்க கேள்வி கோரல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் சேதனப் பசளை உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்கில் பசளையினை உருட்டும் இயந்திரமானது ரூபா 1,700,000 மற்றும் மீளாய்வாண்டில் கூரை அமைப்பதற்காக ரூபா 10,124,136 செலவு செய்யப்பட்டிருந்தும், குறித்த செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாது காணப்பட்டிருந்தது. | சேதனைப் பசளை உருட்டும் இயந்திரம் மற்றும் இடத்திற்கான கூரை வேலைத் திட்டமும் முடிக்கப்பட்டு தற்போது மக்களிடமிருந்து உக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு சேதனப் பசளை தயாரிப்பு வேலைகள் நடைபெறுகின்றன. | குறித்த நோக்கத்தினை அடையக்கூடிய வகையில் வினைத்திறனாக சேதனப் பசளை உற்பத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 05 வாகனங்கள், பாராதீனம் செய்ய வேண்டிய 34 கட்டங்கள் மற்றும் 31 காணிகள் காணப்பட்டிருந்தும் அவற்றின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் 05 வாகனங்களினை யும் உரிமை மாற்றம் செய்வதற்கான செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. காணிகள், கட்டடங்களினை பராதீனம் செய்வதற்கு பிரதேச செயலாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. | காணி, கட்டடங்கள் மற்றும் வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு மிக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 25 கடையறைகள் மற்றும் 02 இறைச்சிக்கடையறைகள் என்பவற்றை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடமாகவுள்ள கடைகளை 2024.03.11, 2024.10.25, 2025.02.18 ஆம் திகதிகளில் 03 கடையறைகள் மாத்திரமே கேள்வி கோரப்பட்டுள்ளது. மேலும் 02 இறைச்சிக்கடைக ளில் ஒன்று வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது | அனைத்து கடையறைகளுக்கும் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம் | | |
| கழிவு நீர் சுத்திகரிப்புக்கான ரூபா 25,717,122 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் , உள்ளக வீதிகள் பூரணமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை மேலும் அதனை செயற்படுத்துவதற்கு தேவையான ஊழியர் பயிற்சி, உத்தரவாதம் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவை தொடர்பாக யார் பொறுப்பு | வேலை முடிவுறுத்தப் பட்டிருந்தாலும் செயற்பாட்டு நடவடிக்கைகள் சில முடிவுறுத்தப்படவில்லை. போதிய வளம் உடனடியாக இல்லாத | வேலைகளை மிக விரைவாக முடிவுறுத்தி செயற்படுத்துவதற்கும், உரிய ஒப்பந்தகாரருடன் முழுமையான ஒப்பந்தம் ஒன்றினை |

| | | |
|---|---|---|
| போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக உரிய முறையில் செயற்திட்டம் ஒன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | காரணத்தினால் செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. | செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையில் காணப்படும் 13 பதவியணிகளுக்கு 39 வெற்றிடங்கள் மற்றும் 07 மேலதிக ஆளணிகள் காணப்பட்டிருந்தும், அவற்றை வருடாந்த இடமாற்றத்தின் மூலம் ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் சபையினால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் பொதுச்சேவைகள் மற்றும் பொதுச்சுகாதார சேவைகள் வினைத்திறனற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சபையில் காணப்படும் 13 பதவியணிகளிலும் 02 பதவியணிகளை தவிர மற்ற பதவியணிகளுக்கு வெற்றிடம் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடம் நிரப்பப்படாமல் உள்ளதுடன் இவர்களுக்கு இடமாற்றம் இல்லாததனால் அதன் மூலம் சீர் செய்ய முடியாதுள்ளது. | சபைக்கு தேவையான ஆளனியினரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 108,550 கடன் நிலுவையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்கள் /பிணையாளிகளிடமிருந்து ஓய்வூதியம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கு உரிய பிரதேச செயலகங்களுக்கு அறிவித்து கடன் நிலுவை தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டிய கடன் தொகையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையினால், உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 03 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி. 133 மற்றும் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறையை மேம்படுத்தல் மற்றும் செயலாற்றலை உயர்த்துவதற்காக பரிந்துரைகளை தயாரித்திருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு குழுவானது ஒவ்வொரு மாதமும் கூட்டப்படுவதுடன் ஒவ்வொரு மாத உறுதிச்சீட்டுக்களும் பரிசீலனை செய்யப்பட்டு சபையிடம் சமர்க்கப்படுகின்றது. | சபையின் நடவடிக்கைகள் முறையாக உள்ளக கணக்காய்வு செய்யப்பட்டு சபையின் செயற்பாடு களை மேம்படுத்துவதற்கும், செயலாற்றலை உயர்த்துவதற்கும் பரிந்துரைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மீண்டுவரும் வருமானமாக ரூபா 217,611,329 பாதிடப்பட்டு ரூபா 143,346,130 உழைக்கப்பட்டிருந்தது. இதனால் பாதிடப்பட்ட வருமானத்தில் ரூபா 74,265,199 பெறப்பட்டிருக்கவில்லை. | பாதீடு என்பது ஒரு உத்தேச மதிப்பீடாக இருப்பதால் கடந்த மற்றும் மீளாய்வாண்டு வருமான மூலங்களின் உண்மைத்தன்மையினையும் செலவினங்களினையும் கருத்திற்கொண்டு எதிர்வரும் ஆண்டுக்கான பாதீடு இயன்றவரை சரியான பாதீடாக தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சபையின் வருமானத்தினை சரியாக இனங்கண்டு பாதீடு செய்வதற்கும் அவற்றினை வினைத்திறனாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.3 சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையினால் நடாத்தப்பட்டு வரும் விலங்கறுமனைக்கான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விலங்கறுமனைக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | விலங்கறுமனை இடத்திற்கு சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணவும், அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவகற்றல், நிர்வாக விடயங்கள், பொதுப்பயன்பாடு, நலன்புரி செலவுகள் யாவும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையக்கூடிய முறையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தனியே வரவு செலவுத்திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு தனியே படிவம் ஒன்றின் மூலமும் தயாரித்து காட்டப்பட்டுள்ளன | 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |